**I.A.1/25 in O.S.203/2024**
நாள் : 6.06.2025
உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் **உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 16 விதி 1(2) மற்றும் பிரிவு 151 சி.பி.சி–ன்படி** மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சி பட்டியலில் கண்டுள்ள நபர்களை மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகளாக விசாணை செய்ய அனுமதிக்கவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கானது பிராது தபசில் சொத்துக்களை நட்பு, திட்பு பார்த்து தரம் வைத்து வாதிகளுக்குரிய பாதி பங்கை பிரிவினை செய்து தனித்த சுவாதீனம் வழங்க உத்தரவு பிறப்பிக்கும்படிக்கு பிரதிவாதிக்கு எதிரக தாக்கல் செய்துள்ளதாகவும், பிராது தபசில் சொத்து வாதியின் தகப்பனாரனா அணைக்கரைமுத்து மற்றும் பிரதிவாதியான பூசைக்கிளி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், பிராது தபசில் சொத்து ஸ்ரீ ரெங்கநாதசாமி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என பிரதிவாதிதரப்பில் கூறப்பட்டதாகவும், அதனை நிரூபணம் செய்ய சேரன்மகாதேவி ரிடி, கடையம் சப்டி, ஆழ்வார்குறிச்சி கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.196(1) 1–74 ல் உள்ள அ –பதிவேடு, அடங்கல் மற்றும் பசலி ரசீது இதுவரை யார் மூலம் செலுத்தப்பட்டது என்ற விபரம் தெரியவேண்டி கிராம நிர்வாக அலுவலரை மனுதாரர்கள் தரப்பு சாட்சிகளாக விசாரித்தால் தான் மனுதாரர்கள் தரப்பு தர்க்கத்தை இந்நீதிமன்றத்தில் தெளிவுபடுத்த இயலும் என்றும், எனவே இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடவேண்டியது அவசியம் என வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பில் பிராது தபசில் சொத்தினை பொறுத்து வாதிகளுக்கோ வாதிகளின் முன்னோர்களுக்கோ எவ்வித உரிமையும் அனுபவமும் கிடையாது என்றும், மனுதாரர் ஸ்ரீ ரெங்கநாதசாமி கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து மனுதாரர் தரப்பில் எந்த ஒரு ஆவணத்தையும் விசாரிக்க இந்த மனுவில் கூறவில்லை என்றும், UDR முன் ஆவணங்களை எடுத்து வர இந்த மனுவில் கூறவில்லை என்றும், ஸ்ரீரெங்கநாதசாமி கோவிலுக்கு பாத்தியப்பட்ட தற்போதைய சொத்தை பார்த்தால் உண்மை நிலவரம் தெரியவரும்

என்றும், எனவே இந்த மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என வாதிடப்பட்டது.

மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் பிராது தபசில் சொத்தினை பொறுத்து பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளநிலையில், மனுதாரர்கள் தரப்பில் ஆழ்வார்குறிச்சி கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.196(1) 1–74 ல் உள்ள அ –பதிவேடு, அடங்கல் மற்றும் பசலி ரசீது இதுவரை யார் மூலம் செலுத்தப்பட்டது என்ற விபரம் தெரியவேண்டி கிராம நிர்வாக அலுவலரை மனுதாரர்கள் தரப்பு சாட்சிகளாக விசாரிக்க அனுமதியளிக்க வேண்டும் என எடுத்துரைக்கப்பட்டுள்ளதும், அதனை மறுத்து எதிர்மனுதார் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் மனுதாரர் கூறும் "அ" பதிவேடு மற்றும் அடங்கல் பதிவேடு, பசிலி ரசீது மற்றும் UDR முன் ஆவணங்களும் இவ்வழக்கிற்கு அவசியமான ஆவணங்கள் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. வருவாய்த்துறையினர் மூலம் மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து சாட்சியாக விசாரித்தால் மட்டுமே வழக்கின் உண்மைநிலை தெரியவருவதுடன், வழக்கில் ஒரு முழுமையான தீர்வு எட்ட முடியுமென்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனு மற்றும் வழக்கின் சூழ்நிலையை கருத்தில்கொண்டு மனுதாரரின் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுதொகை இல்லை.

(ஒப்பம்)
கூ.ம.உ.நீ,
தென்காசி